நாற்பத்தொன்ருவது

ஆண்டு அறிக்கை

ஹிந்து மதாபிமான சங்கம்

காரைக்குடி

விளம்பி - ஐப்பசி - கஎ. 2 - நவம்பர் - 1958.



நமது சங்க கட்டிடம்

91/1

ஓம் :

ஹிந்து மதாபிமான சங்கம்

காரைக்குடி

நாற்பத்தொன்ருவது ஆண்டு

அறிக்கை

தலைவர் அவர்களே ! அவையோர்களே !

வணக்கம். இச் சங்கத்தின் 41-ஆவது ஆண்டு அறிக்கையை உங்கள் முன் படிக்கப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தோற்றுவாய்

'பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேணும்' என்று கனவு கண்ட மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்பெற்ற இச்சங்கம் பிங்கள ஆண்டு ஆவணித் திங்கள் இருபத் தாரும் நாள் (10—9—1917) 'தொண்டு ஒன்றே வழியாக் கண்டார். ஒண்மை உயர் கடவுளிடத்து அன்புடை யார்' ஆன இளைஞர் பலரால் தொடங்கப்பெற்றது. செட்டிமார் நாட்டில் சமய, சமூக, அரசியல் வளர்ச் சிக்கு அடி கோலியது இச் சங்கமே. நமது நாட்டில் பல துறைகளிலும் சிறப்புற்ற அறிஞர் களும் பெரியோர்களும் தங்கள் வருகையால் இச்சங் கத்தைச் சிறப்பித்து இப்பகுதியிலுள்ள இளைஞர் கள் பொதுப்பணிகளில் ஈடுபடுவதற்கு வழிகாட்டி னர். இச்சங்கத்தின் ஆதரவில் ஒரு காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சமயப் பிரசாரம் நடைபெற் றது ; ஸ்ரீ ராமகிருஷ்ண கலாசாலை என்ற பெயரால் தமிழ்க் கலாசாலை ஒன்று நீண்டகாலம் பணியாற்றி யது. விவேகாநந்த நூல் நிலையமும் இலவசப்

படிப்பகமும் இச்சங்கத்தின் முக்கிய உறுப்புக்களாகும்.

நோக்கம்

சமயப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, நல்லோர் கூட்டுறவு, இலக்கியப் பயிற்சி முதலியவற்றை வளர்த்தல் இச்சங்கத்தின் நோக்கமாகும். அவை வளர்வதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்குவதில் இச்சங்கம் பெருந்தொண்டாற்றி வருகிறது.

உறுப்பினர்

புரவலர் தொகை 36-ம், ஆயுள் உறுப்பினர் தொகை 140-ம் உள்பட சங்கத்தின் மொத்த உறுப்பினர் தொகை 242 ஆகும்.

நிர்வாகம்

இச் சங்கத்தின் நிர்வாகம் ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர் ஒரு செயலாளர், ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர் ஆறு உறுப்பினர் ஆகப் பதினொருவர் அடங்கிய நிர்வாகக் குழுவினரால் நடைபெற்று வருகிறது.

சங்க நேரம்

சங்கம் முற்பகல் 9 மணி முதல் 12 மணி வரையிலும், பிற்பகல் 4 மணி முதல் 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

சங்கக் கட்டிடம்

சங்கம், தொடங்கிய நாள் தொட்டு வாடகைக் கட்டிடத்தில் இருந்துகொண்டே பணியாற்றி வந்தது. 31—12—1943-ல் இச்சங்கத்தின் வெள்ளி விழா, தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் சீரிய தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற

91/1

பொழுது அன்னாரைக்கொண்டே இச் சங்கத்தின் சொந்தக் கட்டிடத்திற்குக் கால்கோள் விழா நடைபெற்றது 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற பொன்மொழியை நன்குணர்ந்த பல செல்வர்களின் பொருளுதவிகொண்டு இன்றுள்ள கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது; இது தமிழ் நாட்டின் தவப் புதல்வர் ராஜாஜியால் 24—10—1952-ல் திறந்து வைக்கப்பெற்றது.

விவேகானந்த புத்தகசாலை

இச்சங்கத்தின் அங்கமாக அமைந்துள்ள இப் புத்தகசாலை காளயுத்தி ஆண்டு ஆவணித்திங்கள் ஐந்தாம் நாள் (21—8—1918) நிறுவப்பெற்றது. இலக்கியம், இலக்கணம், சமயம், பொது அறிவு பற்றிய நூல்களும் பல்வேறு பருவ வெளியீடுகளின் தொகுப்புக்களும் நூல் நிலையத்தை அணி செய்கின்றன. இன்று இந்நூல் நிலையத்தில் தமிழில் 2365 புத்தகங்களும், ஆங்கிலத்தில் 472 புத்தகங்களும், வடமொழியில் 10 புத்தகங்களும், இந்தியில் 11 புத்தகங்களும், ஆக மொத்தம் 2858 புத்தகங்கள் உள்ளன. இவற்றுள் இவ்வாண்டில் சேர்க்கப் பெற்றவை 73

படிப்பகம்

இச்சங்கத்தின் ஆதரவில் ஓர் இலவசப் படிப்பகம் நடைபெற்று வருகிறது. The Hindu, தினமணி, என்ற நாளிதழ்களும், ஆனந்த விகடன், கல்கி, தினமணிக் கதிர் ஆகிய வார வெளியீடுகளும், கலைமகள், ஞானசம்பந்தம். கண்ணன், மஞ்சரி, சித்தாந்தம் ஆகிய திங்கள் வெளியீடுகளும் படிப்பகத்திற்கு வருகின்றன. நாள் தோறும் பல அன்பர்கள் அவற்றைப் படித்துப் பயன் பெருகின்றனர்.

ரேடியோ

பொது மக்களின் நலன் கருதி ரேடியோ சங் சங்கத்தில் வைக்கப்பெற்றிருக்கிறது. அது அன்ரு டம் ஒலிபரப்பப்பெறும் முக்கிய வாஞெலி நிகழ்ச்சி களைப் பலர் செவிமடுத்தின் புறவாய்ப்பளிப்பதாய் இருக்கிறது.

நாற்பதாவது ஆண்டுவிழா

ஏவிளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் 18ஆம் நாள் காலை மாலை இருவேளையும் நமது சங் கத்து நாற்பதாவது ஆண்டுவிழாச் சிறப்பாக நடைபெற்றது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரா சிரியர் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந் தரஞர் M. A. B. L. M. O. L. அவர்கள் தலைமை வகிக்க பண்டித வித்துவான் தி. இராமானுஜம் அவர்கள் "சமயவாழ்வு" எனும் பொருள்பற்றி யும், புலவர். சி. தாணு அம்மாள் அவர்கள் "புலமை" எனும் பொருள் பற்றியும் வித்துவான் கா. நயினுர் முகம்மது அவர்கள் "பெரியபுராணத் தில் சைவ இளைஞர்கள்" எனும் பொருள்பற்றி யும் திரு S. ராமகிருஷ்ணன் அவர்கள் "தமிழ் இலக்கிய வரலாறு" எனும் பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினுர்கள்.

சிறப்புக் கூட்டங்கள்

நடப்பு ஆண்டில் இரண்டு சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றன.

17—11—57ல் நடைபெற்ற சிறப்புக் கூட்டத் துக்குச் சங்கத்தலைவர் திரு ராய சொக்கலிங்கன் அவர்கள் தலைமை யேற்க கிரியாபாபாஜி சங்கத் தின் ஸ்தாபகர் யோகி சா. அ. அ. ராமய்யா M.A. அவர்கள் "உலக சமயங்களை உய்வித்த கிரியா

யோகம்" என்ற பொருளில் யோகாப்பியாச முறைகளைப்பற்றி விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்கள் திருமதி. இராம. சோலச்சி அவர்கள் யோகாப்பியாசங்களைச் செய்து காட்டினார்கள்.

21-10-58ல் நடைபெற்ற கலைமகள் விழாச் சிறப்புக்கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. ராய. சொக்கலிங்கன் அவர்கள் தலைமை வகிக்க அழகப்பா கல்லூரித் தமிழாசிரியர் பூ. அமிர்தலிங்கன் அவர்கள் கலைமகளைப்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

அனுதாபத் தீர்மானம்

நடப்பு ஆண்டில் மறைந்த சங்க உறுப்பினரான செம்பொன்னூர் கும. நா. நா. சா. நாச்சியப்ப செட்டியார் அவர்கட்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

இலக்கியக் கூட்டங்கள்

பெரியபுராணம் விளக்கம் நடைபெற்று வருகிறது. வாரந்தோறும் சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 8 மணி வரை இலக்கியக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. திரு. ராய சொ. அவர்கள் இலக்கியக் கூட்டங்களுக்குப் பொறுப்பேற்று விளக்கம் தந்து வருகிறார்கள். இக்கூட்டங்களில் திருவாளர்களான, ராம. சொ. திருநாவுக்கரசு செட்டியார், ராம. திருநாவுக்கரசு செட்டியார், பெரி. நா. நா. அ. தேவராஜன் செட்டியார், சொ. நாராயணன் செட்டியார், ஆகியவர்களில் யாரேனும் கவிதைகளைப் படிக்கின்றனர். இந்த இலக்கியக் கூட்டங்களால் ரசிகர்கள் பெரும் பயனை அடைகின்றனர்.

கூட்டங்கள்

நடப்பு ஆண்டில் நிர்வாக சபை எட்டுத்தடவை கூடிச் சங்கப் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

வேண்டுகோள்

இப்பகுதியிலுள்ள மக்கள் விழிப்பிற்குப் பெருங் காரணமாய் விளங்கும் இச்சங்கத்தில் உறுப்பினர் களாகிச் சங்கத்தை மேலும் மேலும் வளர்க்க வேண்டும் எனப் பெரிதும் வேண்டுகின்ருேம். சங்கத்திற்கு ஆண்டுக் கட்டணம் ரூபாய் ஆறு; ஆயுள் கட்டணம் ரூபாய் நூறு. ரூபாய் இரு நூறுக்குக் குறையாமல் வழங்குபவர் புரவலர்.

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்

என்ற பாரதியாரின் சொற்களால் உங்களை வேண்டி "கோடி மேன்மை நிலவுற இச் சங்கத் தார் பல் ஊழி வாழ்ந்து ஒளிர்க நிலத்தின் மீதே" என்று அன்னுர் வாழ்த்திய தனிச் சங்கமான இதில் பெருவாரியாக உறுப்பினர்களாகிப் பல் லாற்ருனும் சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்க வேண்டுகின்ருேம்.

பாரதி பாட்டுப்போட்டி

1958 செப்டெம்பர் 6, 7 தேதிகளில் பாரதி பாட்டுப் போட்டி நடைபெற்றது. அதற்கு 52 விண்ணப்பங்கள் வந்தன, 40 பிள்ளைகள் போட்டியில் கலந்துகொண்டனர்.

காரைக்குடி ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேஸ்பரர் உயர்நிலைப் பள்ளிமாணுக்கன் எஸ்.சம்பத்துக்கு முதற் பரிசாகத் தங்கப் பதக்கமும், கலைமகள் இசைப்பள்ளி மாணுக்கி செ. லலிதா வுக்கு இரண்டாவது பரிசாக வெள்ளிச் சந்தனப் பேலா வும், ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்பரர் உயர்நிலைப் பள்ளி மாணுக்கன் ஆர். மணிக்கு மூன்ருவது பரிசாக வெள்ளித் தம்ளரும் வழங்கப்பெற்றன. ஏனைய பதிமூன்று மாணுக்க மாணுக்கியர்கட்குத் தகுதிப் பத்திரமும் பாரதி கவிதைப் புத்தகங்களும் கொடுக்கப்பெற்றன. இவ்வகைக்கு திரு. ஏ. வி. எம். மெய்யப்ப செட்டியார் அவர்கள் ரூபாய் நூறு நன்கொடை உதவினுர்கள்.

பாட்டுப் போட்டிக்கு திருவாளர்களான முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள் அ. ராம. ராம. இராம நாதன் செட்டியார் அவர்கள் எம். விஸ்வநாதன் அவர் கள் ராய. சொக்கலிங்கன் அவர்கள் ஆகிய நால்வரும் நீதிபதிகளாக இருந்து நடத்தித் தந்தனர்.

நன்றி

இச்சங்கத்தை இத்தனை ஆண்டுகளாகப் பேணி வளர்த்த பெரியோர்களுக்கும், உறுப்பி னர்களாகி ஊக்கமளித்தவர்கட்கும், புத்தகம் பொருள் முதலியன தந்து ஆக்கமளித்தவர்கட்கும் நிறையப் புத்தகங்களும் சாமான்களும் தந்து உதவிய செட்டியார் நல உரிமைச் சங்கத்தார்க் கும், விழாக்களில் தலைமை தாங்கியும், சொற் பெருக்காற்றியும் அரும்பணி புரிந்த தமிழ் அறி ஞர்கட்கும், இச்சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டும் அனைவருக்கும், எங்கள் உளமார்ந்த நன் றியை உவகையுடன் தெரிவித்து கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மு. மெ. முத்துராமன்,
காரியதரிசி

காரைக்குடி
2–11–58



9—11—1919-ல்
சங்க நிலையத்தில் எடுக்கப்பெற்றது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய

வாழ்த்துப் பாக்கள்

மண்ணுலகின் மீதினிலே எக்காலும்
அமரரைப்போல் மடிவுஇல் லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலாம்; அதற்குரிய
உபாயம் இங்கு செப்பக் கேளீர்!
நண்ணிஎலாப் பொருளினிலும் உட்பொருளாய்ச்
செய்கைஎலாம் நடத்தும் வீருய்த்
திண்ணிய நல் அறிவுஒளியாய்த் திகழும்ஒரு
பரம்பொருளை அகத்தில் சேர்த்து; (1)

செய்கைஎலாம் அதன்செய்கை. நினைவுஎல்லாம்
அதன் நினைவு, தெய்வ மேநாம்
உய்கைஉற நாமாகி நமக்குள்ளே
ஒளிர்வதென உறுதி கொண்டு
பொய், கயமை, சினம், சோம்பர், கவலை, மயல்,
வீண்விருப்பம், புழுக்கம், அச்சம்,
ஐயம்எனும் பேயைஎலாம் ஞானம்எனும்
வாளாலே அறுத்துத் தள்ளி; (2)

எப்போதும் ஆனந்தச் சுடர்நிலையில்
வாழ்ந்துஉயிர்கட்கு இனிது செய்வோர்
தப்பாதே இவ்உலகில் அமரநிலை
பெற்றிடுவார்; சதுர்வே தங்கள்
மெய்ப்பான சாத்திரங்கள் எனும்இவற்றல்
இவ்உண்மை விளங்கக் கூறும்
துப்பான மதத்தினையே ஹிந்துமதம்
எனப்புவியோர் சொல்லு வாரே. (3)

அருமைஉறு பொருளில்எலாம் மிகஅரிதாய்த்
தனைச்சாரும் அன்பர்க்கு இங்கு
பெருமைஉறு வாழ்வுஅளிக்கும் நல்துணையாம்
ஹிந்துமதப் பெற்றி தன்னைக்
கருதி, அதன் சொற்படிஇங்கு ஒழுகாத
மக்கள்எலாம் கவலை என்னும்
ஒருநரகக் குழிஅதனில் வீழ்ந்துதவித்து
அழிகின்றார் ஒய்வுஇ லாமே. (4)

இத்தகைய துயர்நீக்கிக் கிருதயுகம்
தனைஉலகில் இசைக்க வல்ல
புத்தமுதாம் ஹிந்துமதப் பெருமைதனைப்
பார்அறியப் புகட்டும் வண்ணம்
தத்துபுகழ் வளப்பாண்டி நாட்டினில்,கா
ரைக்குடியூர் தனிலே சால
உத்தமராம் தனவணிகர் குலத்துஉதித்த
இளைஞர்பலர், ஊக்கம் மிக்கார், (5)

உண்மையே தாரகம்என்று உணர்ந்திட்டார்,
அன்புஒன்றே உறுதி என்பார்,
வண்மையே குலதர்மம் எனக்கொண்டார்,
தொண்டுஒன்றே வழியாக் கண்டார்,
ஒண்மைஉயர் கடவுளிடத்து அன்புஉடையார்:
அவ் அன்பின் ஊற்றத் தாலே
திண்மைஉறும் "ஹிந்துமத அபிமான
சங்கம்" ஒன்று சேர்த்திட்டாரே. (6)

பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர்
பிரசங்கம் பண்ணு வித்தும்,
நலம்உடைய கலாசாலை புத்தகசா
லைபலவும் நாட்டி யும்தம்
குலம்உயர நகர்உயர நாடுஉயர
உழைக்கின்றார்; கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்ஊழி
வாழ்ந்துஒளிர்க நிலத்தின் மீதே. (7)

இணைப்பு-1

(அ) புரவலர்

காரைக்குடி

1 திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார்
2 ,, ஏவி. மெய்யப்ப செட்டியார்
3 ,, சா. நா. அ. சொ. அ. அண்ணுமலை செட்டியார்
4 ,, சுப. சு. ராம. சுப்பிரமணியன் செட்டியார்
5 ,, சா. லெ. நா. சாத்தப்ப செட்டியார்
6 ,, சா. நா. அ. அழ. அ. அழகப்ப செட்டியார்
7 ,, அ. மு. க. மு. க. கறுப்பன் செட்டியார்
8 ,, சா. அரு. மெ. மெய்யப்ப செட்டியார்
9 ,, மெ. செ. இராமசாமி செட்டியார்
10 ,, ஆறு. ஆ. ராம. சொ. சொக்கலிங்கன் செட்டியார்
11 ,, தி. நா. நாராயணன் செட்டியார்
12 ,, அரு. மு. மு. அருணுசலம் செட்டியார்
13 ,, நா. ஆ. மாரிமுத்து
14 ,, எ. பி. பியாரிலால்
15 ,, சா. ராம. சா. நாராயணன் செட்டியார்

இராயவரம்

16 ,, ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்
17 ,, அ. கு. ராம. சு. சொ. இராமன் செட்டியார்
18 ,, மு. அ. மு. பழநியப்ப செட்டியார்

தேவகோட்டை

19 ,, உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்
20 ,, தி.சு.பழ ப.சித சுப்பிரமணியன் செட்டியார்
21 ,, சு. மு. மு. சுப்பிரமணியன் செட்டியார்

கோனுபட்டு

22 ,, க. மு. அ. முத்தப்ப செட்டியார்
23 ,, சு. மு ராம. முரு. முருகப்ப செட்டியார்

பள்ளத்தூர்

24 ,, மு. அ. பழநியப்ப செட்டியார்
25 ,, மெ. மு. மெய்யப்ப செட்டியார்

மதுரை

26 ,, லெ. அழகுசுந்தரம் செட்டியார்
27 ,, கருமுத்து. தியாகராசன் செட்டியார்

ஆத்தன்குடி

28 ,, கா. அரு. கா. காடப்ப செட்டியார்

கானாடுகாத்தான்

29 ,, க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார்

கோட்டையூர்

30 ,, க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார்

சிறுவயல்

31 ,, வ. பழநியப்ப செட்டியார்

செட்டிநாடு

32 ,, ராஜா. ஸர். மு. அ. முத்தையா செட்டியார்

நாட்டரசன்கோட்டை

33 ,, வெ. கண. கண்ணப்ப செட்டியார்

கண்டனூர்

34 ,, வீ. தெ. வீரப்ப செட்டியார்

திருச்சிராப்பள்ளி

35 ,, அரு. அண்ணமலை செட்டியார்

உ. சிறுவயல்

36 ,, ப. ராம. அழ. அழகப்ப செட்டியார்

(ஆ) ஆயுள் உறுப்பினர்

காரைக்குடி

37 திரு. சா. நா. சா. தெ. சாத்தப்ப செட்டியார்
38 ,, ராம. ப. மெ. ப. மெய்யப்ப செட்டியார்
39 ,, அ. ராம. ராம. இராமநாதன் செட்டியார்
40 ,, சொ. நாராயணன்
41 ,, அ. மு. க. மு. சித. முத்துக்கறுப்பன் செட்டியார்
42 ,, சித. ராய. சிதம்பரம் செட்டியார்
43 ,, நா. இராமநாதன் செட்டியார்
44 ,, மெ. செ. அ. மெ. பழநியப்ப செட்டியார்
45 ,, மெ. நா. சித. சிதம்பரம்
46 ,, சா. கணேசன்
47 ,, மெ. சிவ. மெய்யப்ப செட்டியார்
48 ,, மெ. வி. மெ. மெய்யப்பன்
49 ,, மு. நடராஜன் செட்டியார்
50 ,, சுப. சு. சு. சுப. சுப்பிரமணியன் செட்டியார்
51 ,, ஆ. சொ. சொக்கலிங்கம் செட்டியார்
52 ,, அழ. அழகப்பன்
53 ,, மு. அரு. சா. அருணசலம் செட்டியார்
54 ,, மெ. சு. தி. தண்ணீர்மலேயான் செட்டியார்
55 ,, சு. கும. சுப. மெய்யப்ப செட்டியார்
56 ,, சித. ராம. நா. நாராயணன் செட்டியார்
57 ,, சித. சோம. சிதம்பரம் செட்டியார்
58 ,, சி. மு. அரு. நா. அருணசலம் செட்டியார்
59 ,, அ. தெ. மு. தெ. முத்துக்கறுப்பன் செட்டியார்
60 ,, மு. மெ. இராமசாமி செட்டியார்
61 ,, அண. அழ. அழகப்ப செட்டியார்
62 ,, அபிசீனியா பழ. நாச்சியப்பன்
63 ,, அழ. அருணசலம் செட்டியார்
64 ,, சு. பழ. சுப்பையா செட்டியார்
65 ,, அழ. அ. நா. நாராயணன் செட்டியார்
66 ,, பழ. அருணசலம்

67 திரு. அழ. கரு. அடைக்கப்ப செட்டியார்
68 ,, ராம. பழநியப்ப செட்டியார்
69 ,, அரு. அருணசலம்
70 ,, ஆவி. பழ. சித. ராம. இராமநாதன்
செட்டியார்
71 ,, மு. பழ பழநியப்ப செட்டியார்
72 ,, ஆவி. ப. முரு மு. முரு. பழநியப்ப
செட்டியார்
73 ,, முரு. லெ. முருகப்ப செட்டியார்
74 ,, சுப. மு. நா. வீரப்ப செட்டியார்
75 ,, ப. அழ. பழநியப்பன்
76 ,, ராம. தெ. தெவராயன் செட்டியார்
77 ,, பழ. அ அ. பழநியப்ப செட்டியார்
78 ,, அரு. நா. நாராயணன் செட்டியார்
79 ,, மரு. சு. மாணிக்கவேல்
80 ,, ரெ. முத்துக்கணேசன்
81 ,, முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார்
82 ,, தெ. நா. ராம. மெ. மெய்யப்ப செட்டியார்
83 ,, மெய ஆ. அ. மு. அண்ணமலை செட்டியார்
84 ,, முரு. சுப. ராம. தெ. சுப்பிரமணியன்
செட்டியார்
85 ,, அண. அ. அண. அண்ணமலை செட்டியார்
86 ,, மெய. ஆ அ. நாச்சியப்ப செட்டியார்
87 ,, பழ. தெ. லெ தேனப்ப செட்டியார்
88 ,, மு. மெ. முத்துராமன்
89 ,, பெரி. அரு. அருணசலம் செட்டியார்
90 ,, ராம. கறு. கறுப்பன் செட்டியார்
91 ,, சு. கும. மெ. மெய்யப்ப செட்டியார்
92 ,, குப. சு. அ. மெ. சொ. சொக்கலிங்கம்
செட்டியார்
93 ,, எஸ். இராமசாமி செட்டியார்
94 ,, சித. ராம. சித. சிதம்பரம் செட்டியார்
95 ,, சா. நா. அ. அழ. சித. சிதம்பரம் செட்டியார்
96 ,, அ. மு. க. மு. அழ. முத்துக்கறுப்பன்
செட்டியார்

97 திரு. சா. நா. அ. அழ சொ. சொக்கலிங்கம் செட்டியார்
98 ,, கரு. வ. அழகப்ப செட்டியார்
99 ,, அரு. ராம. முத்துராமன்
100 ,, சேவு. க. சேவு. சேவுகன் செட்டியார்
101 ,, ராம. வெ. இராமநாதன் செட்டியார்
102 ,, மு. சித. முத்துராமன் செட்டியார்
103 ,, கி. நாராயணன் செட்டியார்
104 ,, வ. ராம. இராமசாமி செட்டியார் B. A.,
105 ,, பழ.வெ.ராம.வெ. இராமநாதன்செட்டியார்
106 ,, அ. மெ. அ. மெய்யப்ப செட்டியார்
107 ,, அ. ராம. வெ. வள்ளியப்ப செட்டியார்
108 ,, சி. ப. சித. மாணிக்கம் செட்டியார்
109 ,, அ. மெ. அ, பழநியப்ப செட்டியார்
110 ,, சா. நா. நாராயணன்
111 ,, மெ. ராம. சொ. வீரப்பன்
112 ,, க. அழ. ராம. கரு. இராமசாமி செட்டியார்
113 , வெ. ராம. மெ. ராம. மெய்யப்ப செட்டியார்
114 ,, வீர. கண்ணப்ப செட்டியார்
115 ,, மெ. லெ. மெய்யப்ப செட்டியார்
116 ,, ராம. மு. நா. இராமநாதன் செட்டியார்
117 ,, வயி நாகரம்சோம.இராமநாதன்செட்டியார்
118 ,, மு. மு. சுப்பிரமணியன் செட்டியார்
119 ,, சித. பழநியப்பன்
120 ,, கதி. ராம. சுப்பிரமணியன் செட்டியார்

தேவகோட்டை

121 ,, அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார்
122 ,, அழ. சுப. பழ. திருநாவுக்கரசு செட்டியார்
123 ,, T. பார்த்தசாரதி B. A., B. L.,
124 ,, S. மெய்யப்பன் B. A., B. L.,
125 ,, முத்து. கரு. அரு. பழ. வெ. வெங்கடாசலம் செட்டியார்
126 ,, பழ. செ. கரு. லெ. லெட்சுமணன் செட்டியார்
127 ,, பழ. சோம. கைலாசநாதன் செட்டியார்

128 திரு. உ. ராம. மெ. சு. செ. பழ. லெட்சுமணன் செட்டியார்
129 ,, அரு. ராம. அரு. அருணாசலம் செட்டியார்
130 ,, முத்து. கரு. அரு. கரு. அரு. அருணாசலம் செட்டியார்
131 ,, ராம. அரு. அரு. ராம. அரு. இராமநாதன் செட்டியார்
132 ,, லெ. மு. வீ. முத்துவீரப்ப செட்டியார்
133 ,, லெ. அரு. அருணாசலம் செட்டியார்

ஆத்தன்குடி

134 ,, கு. ராம. ப. முத்தையா செட்டியார்
135 ,, பெ. லெ. லெட்சுமணன் செட்டியார்
136 ,, பழ. அருணாசலம் செட்டியார்
137 ,, கரு. மு. சித. சிதம்பரம் செட்டியார்
138 ,, சி. ராம. நா. நா. இராமநாதன்செட்டியார்

இராயவரம்

139 ,, S. H. நாராயணன்
140 ,, ராம. ராம. இராமனுதன் செட்டியார்
141 ,, மு. அ. மு. காசிவிசுவநான்
142 ,, ப. வ. அழ. குழந்தையன் செட்டியார்
143 ,, ப. வ. அழ. வைரவன் செட்டியார்

நாச்சியார்புரம்

144 ,, சு. மு. சுப. சொக்கலிங்கம் செட்டியார்
145 ,, வயி. சண்முகம் செட்டியார் J. P.
146 ,, கரு. தெ. வேலாயுதம் செட்டியார்
147 ,, சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார்
148 ,, கண. செ. கண. அண்ணமலை செட்டியார்
149 ,, ந. மெ. தியாகராஜன் செட்டியார்

அமராவதிபுதூர்

150 ,, ராய. சொக்கலிங்கன்
151 ,, வெ. ராம. சோம. கறுப்பன் செட்டியார்
152 ,, மு. மரகதவல்லி அம்மாள்

இராமச்சந்திரபுரம்

153 திரு. வ சு. சு, சுப்பிரமணியன் செட்டியார்
154 ,, குமர. நா. குமரப்ப செட்டியார்
155 ,, ஏ. சித. ஏகப்ப செட்டியார்

ஆ தெற்கூர்

156 கரு. முத்து. சிவலிங்கம் செட்டியார்

கோட்டையூர்

157 திரு அரு. நா. அருணாசலம் செட்டியார்
158 ,, லெ. பெ. லெ. ராம. இராமசாமி செட்டியார்
159 ,, சித. தே. பழநியப்ப செட்டியார்

கொத்தமங்கலம்

160 ,, சி. வெ. சி. சின்னகறுப்பன் செட்டியார்
161 ,, சி. அ. சி. காசிநாதன் செட்டியார்

கோனபட்டு

162 ,, ப. சொ. பழநியப்ப செட்டியார்
163 ,, மெ. அ. ராம. சுப்பிரமணியன் செட்டியார்

பள்ளத்தூர்

164 ,, பெரி. அழகப்ப செட்டியார்
165 ,, ராம. அ. க. கறுப்பன் செட்டியார்

அரிமளம்

166 ,, அ. செ. சு. ராம. சாமிநாதன் செட்டியார்

அரியக்குடி

167 ,, வயி. ராம. கி. இராமையா செட்டியார்

ஆவினிப்பட்டி

168 ,, அ. பழ. பழநியப்ப செட்டியார்

கண்டரமாணிக்கம்

169 ,, வி. சா. கா. காசிச் செட்டியார்

கண்டவராயன்பட்டி

170 திரு. சிவ. அழ. அழகப்ப செட்டியார்

காரைடுகாத்தான்

171 ,, வை. சு. சண்முகம் செட்டியார்

கூழிபிறை

172 ,, வ. ராம. சி. சின்னையா செட்டியார்

சிருவயல்

173 ,, மு. கா. காசிவிசுவநாதன் செட்டியார்

பலவான்குடி

174 ,, ராம. கும. சு. குமரப்ப செட்டியார்

பூலாங்குறிச்சி

175 ,, வ. ராம. வள்ளியப்ப செட்டியார்

மதுரை

176 ,, ஆர். நாகராஜ்

(இ) உறுப்பினர்

காரைக்குடி

177 திரு மு. நா. வீர. பெரியணன் செட்டியார்
178 ,, ஆ. மு. ஆறு. பழநியப்ப செட்டியார்
179 திரு C. ராமையா
180 ,, பழ. சண்முகம்
181 டாக்டர் V. வீரப்பன் M. B. B. S.
182 திரு சிவ. அ. சிவராமன் செட்டியார்
183 ,, குப. முத்து. வீர. வீரப்ப செட்டியார்
184 ,, பழ. நாராயணன் செட்டியார்
185 ,, ஆத. லெ. ஆத. சொ. திருநாவுக்கரசு செட்டியார்
186 ,, தொ. மெ. ராம. வெ. சோமசுந்தரம் செட்டியார்
187 ,, ப. சு. ராம. அண்ணாமலை செட்டியார்
188 ,, பழ. தெ. லெ. அருணாசலம்
189 ,, அரு. சுப்பிரமணியன்

190 ,, கும. லெ. சுப்பிரமணியன் செட்டியார்
191 ,, சித. சித. சிதம்பரம் செட்டியார்
192 ,, N. சுப்புரெட்டியார் M. A. B. Sc L. T.
193 ,, பெ சி அழ. சிதம்பரம் செட்டியார்
194 ,, த. இராமகிருஷ்ணன்
195 ,, ராம. வள்ளியப்ப செட்டியார்
196 ,, மெய பழ. மெ. சொக்கலிங்கம் செட்டியார்
197 ,, சித நா இராமநாதன் செட்டியார்
198 ,, க. தேசிகன்
199 ,, குப. சு. அ. மெ. மெ. மெய்யப்பசெட்டியார்
200 ,, முரு.நா.சித.பழ.வீர.நாராயணன்செட்டியார்
201 டாக்டர் N. உதயசிங்
202 திரு எம். பழநியப்பன்
203 ,, சுப. ராம. நா. நாச்சியப்ப செட்டியார்
204 ,, சுப. வெ. வேங்கடாசலம் செட்டியார்
205 ,, G. R. ஸ்ரீனிவாஸன்
206 ,, ராம. அழ. இராமனுதன் செட்டியார்
207 ,, இரா. சாரங்கபாணி M. A.
208 ,, உ. பாலசுப்பிரமணியன் M. A.
209 ,, பெரி. நா. நா. அ. தேவராஜன்செட்டியார்
210 ,, ராம. சொ. திருநாவுக்கரசு செட்டியார்
211 ,, ஆர். ராமனுஜ ஐயங்கார்
212 ,, கே. சங்கரய்யர்
213 ,, TR. ST. கண்ணப்பன்
214 ,, கி. நா. கிருஷ்ணன்
215 ,, மெ. காந்தி
216 ,, S. ஏகப்பன்
217 ,, AR. லெட்சுமணன்
218 ,, சிவ. கா. முத்து
219 ,, வி. வெ. குப. தண்ணீர்மலே செட்டியார்
220 ,, ராம. சொ. இராமசாமி செட்டியார்
221 ,, லெ. கணேசன்
222 ,, இராம. தேனப்பன்

கோட்டையூர்

223 ,, ராம. அழ. ராம. இராமனுதன் செட்டியார்

224 திரு. ராம. அழ. ராம. அண்ணுமலை செட்டியார்
225 ,, பெ. ராம. அண்ணுமலை செட்டியார்

பள்ளத்தூர்

226 ,, அ. ராம. அழ. அழகப்ப செட்டியார்
227 ,, லெ. மு. லெட்சுமணன் செட்டியார்
228 ,, சுப. அருணுசலம்

ஆத்தன்குடி

229 ,, சித. மு. சித. சிதம்பரம் செட்டியார்

நாச்சியார்புரம்

230 ,, பெரி. பெ. நா. சுந்தரம் செட்டியார்
231 ,, நா. லெ. ராம. இராமசாமி செட்டியார்

அமராவதிபுதூர்

232 ,, சுப. கண்ணன்

அரண்மனைசிறுவயல்

233 ,, முரு. பழ. பழநியப்ப செட்டியார்

இராயவரம்

234 ,, வெ. அரு. வேங்கடாசலம் செட்டியார்

கானுடுகாத்தான்

235 ,, இராம. சிவராமன் செட்டியார்
236 T, R. M. இராமசாமி செட்டியார்

கோனுபட்டு

237 ,, நா. வயிரவன்

சொக்கலிங்கம்புதூர்

238 ,, சு. வீர. வீரப்பன்

புதுவயல்

239 ,, அ. அழ. அண்ணுமலை செட்டியார்

மதுரை

240 ,, இ. அண்ணுமலை நாடார்

கண்டவராயன்பட்டி

241 ,, மு. ப. வ. மாணிக்கம் செட்டியார்

இராமநாதபுரம்

242 ,, சே. மு. கமால்

இணைப்பு-2

ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கிய பெரியார்கள்

1 திரு. வே. முத்துசுவாமி அய்யர்
2 ,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
3 டாக்டர் T. S. S. ராஜன்
4 திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை
5 ,, ந மு. வேங்கடசாமி நாட்டார்
6 ,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
7 ,, வ. உ. சிதம்பரம் பிள்ளை
8 ,, எஸ். சோமசுந்தர பாரதியார்
9 ,, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்
10 ,, டி. கே. சிதம்பரநாத முதலியார்
11-12 ,, ரா. பி. சேதுப் பிள்ளை
22 டாக்டர் T. S. S. ராஜன்
23 தவத்திரு. சுவாமி சித்பவானந்தா
24 திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்
25 ,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
28 ,, எஸ் நடராஜ நாடார்
35 சக்கரவர்த்தி இரரஜகோபாலச்சாரியார்
36 டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
39 திரு. ஷண்முகராஜேச்வர சேதுபதி (முதல் நாள்)
,, சொ. முருகப்பனுர் (கவியரங்கம்)
,, A. G. வேங்கடாச்சாரியார் (மறுநாள்)
40 ,, தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்

இணைப்பு 3

புத்தகம் வழங்கிய அன்பர்கள்

1	ஹிந்து மதாபிமான சங்கம்	21
2	செட்டியார்கள் நலவுரிமைச் சங்கம்	31
3	தருமை ஆதீனம்	5
4	அன்பர்கள்	5
5	ராய. சொக்கலிங்கன்	3
6	சா. கணேசன்	3
7	N. சுப்புரெட்டியார்	3
8	ராம. சொ. திருநாவுக்கரசுசெட்டியார்	2
	ஆக.	73

இணைப்பு 4

40 ஆவது ஆண்டுவிழாவிற்கு நன்கொடை வழங்கிய அன்பர்கள்

ராம. அரு. வீர. தேவகோட்டை	100
வெ. ராம. சோம கரு. அ புதூர்	10
அரு. மு. மு. அரு. முத்துப்பட்டணம்	10
சித. ராம. நா. காரைக்குடி	10
தொ. மெ. ராம. வெ. சோம ,,	5
சிப. சித.	5
அரு. நா.	5
மெ. ய. ஆ. அ. நா.	5
பழ. தெ. லெ. அரு.	5
பழ. நா.	5
முத்த. வெ. சொ.	5
பெரி. நா. நா. அ. தே. முத்துப்பட்டணம்	5
டாக்டர். உதயசிங். காரைக்குடி	5
ராம. பெ. ராம. அண. கோட்டையூர்	5
அ. அழ. அண. புதுவயல்	5
	ஆக ரூ 185

பாரதி பாட்டுப் போட்டிப் பரிசுக்கு நன்கொடை
A. V. M. மெய்யப்ப செட்டியார் ரூ 100

ஓம்

10—9—1917 ஷு 1958 அக்டோபர் மீ 25 உ வரை ஐந்துகை

ஆதாய வரவு	ரூ	4502 63	
வட்டி வரவு	ரூ	2061 12	
பிரவேசக் கட்டண வரவு	ரூ	980 00	
புரவலர் வரவு	ரூ	19554 00	
ஆயுள் உறுப்பினர் வரவு	ரூ	15675 00	
உறுப்பினர் சந்தா வரவு	ரூ	19688 61	
நன்கொடை வரவு	ரூ	8335 97	
சாமான் கொள்முதல்	ரூ		2166 49
புத்தகம் கொள்முதல்	ரூ		157 28
சங்கக்கட்டிடம் ,,	ரூ		16598 52
இராமகிருஷ்ண கலாசாலை	ரூ		1548 00
விவேகானந்த புத்தகசாலை	ரூ		893 15
சென்னை அரசாங்க மின்சார இலாகா பற்று	ரூ		25 00
நகரச் சிவன்கோவில் அட்வான்ஸ்	ரூ		30 00
அட்வான்ஸ் வரவு	ரூ	15 00	
அபராதத் தொகை வரவு	ரூ	200 00	
பழ. வெங்கடாசலம் கேஸ் பற்று	ரூ		3040 55
வசூலாகாச் செலவு	ரூ		4000 00

கட்டிட வாடகைச் செலவு	ரூ			5021	03
இடவாடகைச் செலவு	ரூ			485	00
மின்சாரச் செலவு	ரூ			1091	03
சிப்பந்திச் செலவு	ரூ			7082	17
பத்திரிக்கைச் சந்தா	ரூ			3205	65
அச்சுக்கூலி	ரூ			1527	34
உபன்யாசச் செலவு	ரூ			5039	17
பல்வகைச் செலவு	ரூ			3237	98
ஆண்டுவிழாச் செலவு	ரூ			10042	84
தி பாங்க் ஆப் காரைக்குடி	ரூ			5213	65
பிரயாணச் செலவு	ரூ			6	58
பொக்கிஷதார் இருப்பு	ரூ			600	90
ஆக வரவு பற்று	ரூ	71012	33	71012	33

ராய. சொக்கலிங்கன்,
தலைவன்.

மு. மெ. முத்துராமன்,
காரியதரிசி.

மேற்கண்ட கணக்குகளும் வவுச்சர்களும் சரியாயிருக்கின்றன.

வ. ராம. ராமசாமி,
கணக்குப் பரிசோதகர்.

1—11—57 முதல் 25—10—58 வரை ஐந்துகை.

முன் இருப்பு	ரூ	25	62		
ஆதாய வரவு	ரூ	342	49		
வட்டி வரவு	ரூ	399	34		
பிரவேசக் கட்டணம் வரவு	ரூ	21	00		
புரவலர் வரவு	ரூ	600	00		
ஆயுள் உறுப்பினர் வரவு	ரூ	1100	00		
உறுப்பினர் சந்தா வரவு	ரூ	324	00		
நன்கொடை வரவு	ரூ	185	00		
சாமான் கொள்முதல்	ரூ			9	00
புத்தகம் கொள்முதல்	ரூ			157	28
விவேகானந்த புத்தகசாலைப் பற்று	ரூ			46	87
இடவாடகைச் செலவு	ரூ			50	00
மின்சாரச் செலவு	ரூ			83	50
சிப்பந்திச் செலவு	ரூ			378	00
பத்திரிகைச் சந்தா செலவு	ரூ			170	85
பல்வகைச் செலவு	ரூ			133	93
ஆண்டுவிழாச் செலவு	ரூ			348	72
தி பாங் ஆப் காரைக்குடி பற்று	ரூ			1011	82
பிரயாணச் செலவு	ரூ			6	58
பொக்கிஷதார் வசம் இருப்பு	ரூ			600	90
	ரூ	2997	45	2997	45

நடப்பு ஆண்டு நிர்வாக சபையார்
1957 - 58

(க) திரு. ராய. சொக்கலிங்கன், தலைவர்

(உ) ,, சா. அரு. மெ. மெய்யப்ப செட்டியார்
துணைத் தலைவர்

(ங) ,, மு. மெ. முத்துராமன், காரியதரிசி

(ச) ,, அரு. ராம. முத்துராமன்,
துணைக் காரியதரிசி

(ரு) ,, நா. இராமநாதன், பொருளாளர்

(சூ) ,, ராம. ப. மெ. ப. மெய்யப்ப செட்டியார்

(எ) ,, ராம. சொ. திருநாவுக்கரசு

(அ) ,, கா. அரு. கா. காடப்ப செட்டியார்

(கூ) ,, அபிசீனியா பழ. நாச்சியப்பன்

(கo) ,, மரு. சு. மாணிக்கவேல்

(கக) ,, சா. கணேசன்

கணக்குத் தணிக்கையாளர்

திரு. வ. ராம. இராமசாமி

,, ந. சுப்புரெட்டியார்

புதிய ஆண்டு நிர்வாக சபையார்.

(க) திரு. ராய. சொக்கலிங்கன், தலைவர்

(உ) ,, அரு. மு. மு. அருணாசலம் செட்டியார்
துணைத் தலைவர்

(ங) ,, நா. இராமநாதன் காரியதரிசி

(ச) ,, ராம. தெ. தெவராயன்; துணைக் காரியதரிசி

(ரு) ,, அரு. ராம. முத்துராமன்; பொருளாளர்

(சா) ,, ராம. சொ. திருநாவுக்கரசு

(எ) ,, அ. ராம. ராம. இராமநாதன் செட்டியார்

(அ) ,, சா. அரு. மெ. மெய்யப்ப செட்டியார்

(கூ) ,, கா. அரு. கா. காடப்ப செட்டியார்

(கo) ,, அபிசீனியா, பழ. நாச்சியப்பன்

(கக) ,, மு. மெ. முத்துராமன்

கணக்குத் தணிக்கையாளர்

(க) சே. மு. கமால்

(உ) S. இராமசாமி

இணைப்பு-5

ராய. சொ. மணிவிழாக் குழு

உறுப்பினர்கள்

1 மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் காரைக்குடி.
2 அ. சொ. அண்ணுமலை செட்டியார் ,,
3 க. தெ. க. அழகப்ப செட்டியார் ,,
4 ஏவி. எம். மெய்யப்ப செட்டியார் ,,
5 ஏ. சுப்பையா செட்டியார் ,,
6 சு. ராம. சு. சுப்பையா செட்டியார் ,,
7 ராம. சா. நாராயணன் செட்டியார் ,,
8 அ. தெ. மு. மு. நடராஜன் செட்டியார் ,,
9 லெ. தேனப்ப செட்டியார் ,,
10 மெ. செ. ராமசாமி செட்டியார் ,,
11 க. அழ. ராம. இராமசாமிசெட்டியார் ,,
12 ராம. வெ. ராமநாதன் செட்டியார் ,,
13 இராம. சிதம்பரம் செட்டியார் ,,
14 முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார் ,,
15 வ. சுப. மாணிக்கம் செட்டியார் ,,
16 க. தேசிகன் ,,
17 பூ. அமிர்தலிங்கன் ,,
18 என். சுப்பு ரெட்டியார் ,,
19 ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் ,,
20 அரு. அருணுசலம் செட்டியார் ,,
21 அரு. மு. மு. அருணுசலம் செட்டியார் ,,
22 சொ. நாராயணன் ,,
23 பெரி. நா. நா. அ. தேவராஜன் செட்டியார் ,,
24 அ. ராம. ராம. இராமநாதன் செட்டியார் ,,
25 அ. மு. க. மு. சித. முத்துக்கறுப்பன் செட்டியார் ,,
26 மெ. நா. சித. சிதம்பரம் செட்டியார் ,,
27 சா. லெ. நா. சாத்தப்ப செட்டியார் ,,

28 மு. அரு. சா. அருணாசலம் செட்டியார் ,,
29 சா. நா. அ. அழ. அ. அழகப்ப செட்டியார் ,,
30 கி. நாராயணன் செட்டியார் ,,
31 A. P. பியாரிலால் சர்மா ,,
32 கு. அ. அங்கமுத்து முதலியார் ,,
33 A. M. மாரிமுத்து ,,
34 ராய. சித. சிதம்பரம் செட்டியார்
35 மெ. ராம. சொ. சொக்கலிங்கம் செட்டியார் ,,
36 மெ. செ. அ. மெ பழநியப்ப செட்டியார் ,,
37 சி. மு. அரு. நா. அருணாசலம் செட்டியார் ,,
38 மு. பழ. பழநியப்ப செட்டியார் ,,
39 இராம. திருநாவுக்கரசு செட்டியார் ,,
40 அரு. நா. நாராயணன் செட்டியார் ,,
41 டாக்டர் V. வீரப்பன் M. B. B. S. ,,
42 டாக்டர் T. V. அப்பாச்சாமி ,,
43 ஆறு. பழ. சி. ப. மாணிக்கம் செட்டியார் ,,
44 அழ. அருணாசலம் செட்டியார் ,,
45 வ. ராம. ராமசாமி செட்டியார் ,,
46 கரு. சொ. பழநியப்ப செட்டியார் ,,
47 சே. மு. கமால் ,,
48 பழ. சண்முகம் செட்டியார் ,,
49 ப. மு. சித. பழநியப்ப செட்டியார் ,,
50 ரெ. முத்துக்கணேசன் ,,
51 சா. அரு. மெ. மெய்யப்ப செட்டியார் ,,
52 சு. மு. பழ. நாச்சியப்ப செட்டியார் ,,
53 மு. மெ முத்துராமன் செட்டியார் ,,
54 அரு. ராம முத்துராமன் செட்டியார் ,,
55 நா. இராமநாதன் செட்டியார் ,,
56 ராம. ப. மெ. ப. மெய்யப்ப செட்டியார் ,,
57 சா. கணேசன் ,,
58 மரு. சு. மாணிக்கவேலு செட்டியார் ,,
59 ராம சொ. திருநாவுக்கரசு செட்டியார் ,,
60 சித. சித. சிதம்பரம் செட்டியார்
61 அ. மெ. அ. பழநியப்ப செட்டியார் ,,
62 ஆ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் ,,
63 மு. கா. காசிச் செட்டியார் ,,

64 கரு. வ. அழகப்ப செட்டியார் ,,
65 மு. சித. முத்துராமன் செட்டியார்
(சென்னை) ,,
66 ராம. தெ. தெவராயன் ,,
67 அ. மு. க. மு. க. கறுப்பன் செட்டியார் ,,
68 கதி. ராம. சுப்பிரமணியன் செட்டியார் ,,
69 எஸ். ராமசாமி செட்டியார் ,,
70 அள. சுப. பழ. திருநாவுக்கரசு
செட்டியார் தேவகோட்டை
71 உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்ப
செட்டியார் ,,
72 P. L. கண்ணப்ப செட்டியார் ,,
73 V. மாயாண்டி செட்டியார் ,,
74 முத்து. கரு. மு முத்தையா செட்டியார் ,,
75 அள. அரு. சோமநாதன் செட்டியார் ,,
76 முத்து. கரு. அரு. கரு. அருணாசலம்
செட்டியார் ,,
77 P. S. S. சோமசுந்தரம் செட்டியார் ,,
78 T. பார்த்தசாரதி அய்யங்கார் B.A.B.L. ,,
79 அ. ராம. அ. லெ. முத்துவீரப்ப
செட்டியார் ,,
80 பழ. சோம. கைலாசநாதன் செடிட்யார் ,,
81 D. R. அருணாசலம் செட்டியார் ,,
82 முத்து. கரு. அரு. பழ. வெங்கடாசலம்
செட்டியார் ,,
83 தி. சு. பழ. ப. சிதம்பரம் செட்டியார் ,,
84 உ. மு. சுப. லெ. மெய்யப்ப செட்டியார் ,,
85 ராம. அரு. அரு ராம. அரு. வீரப்ப
செட்டியார் ,,
86 பாலகவி. வே. இராமனுதன் செட்டியார் ,,
87 பெ. சித. லெட்சுமணன் செட்டியார்
சண்முகநாதபுரம்
88 வெ. ராம. சோம. கறுப்பன் செட்டியார்
அமராவதிபுதூர்
89 மு. மரகதவல்லி அம்மாள் ,,
90 வயி. அ. ராம. அண்ணாமலை செட்டியார் ,,

91 வயி. ராம. கி. ராமய்யா செட்டியார் அரியக்குடி
92 எ. மு. முத்தப்ப செட்டியார் புதுவயல்
93 S. மெய்யப்பன் B. A., B. L. ,,
94 பழ. சுப. சுப்பிரமணியன் செட்டியார்
கண்டனூர்
95 வீ. தெ. வீரப்ப செட்டியார் ,,
96 வயி. ராம. நா. ராம. காசிச் செட்டியார் ,,
97 நா. அ. ராம. கா. இராமநாதன் செட்டியார் ,,
98 லெ. சித. சுப்பிரமணியன் செட்டியார் ,,
99 க. வீ. அள. மு. இராமநாதன் செட்டியார்
கோட்டையூர்
100 A. K. செட்டியார் ,,
101 அ. க. அ. சித. வெ. சித. வெங்கடாசலம்
செட்டியார் ,,
102 ராம. அழ. ராம. இராமநாதன்
செட்டியார் ,,
103 ராம. பெ. அழ. அழகப்ப செட்டியார் ,,
104 ராம. பெ. நா. அருணாசலம் செட்டியார் ,,
105 அ. மு. மு. முருகப்ப செட்டியார் பள்ளத்தூர்
106 சுப. அருணாசலம் ,,
107 உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியார் ,,
108 K. ராமநாதன் செட்டியார் (கோலாலம்பூர்) ,,
109 ராம. அ. கருப்பன் செட்டியார் ,,
110 பெரி. அழகப்ப செட்டியார் ,,
111 லெ. மு. லெ. லெட்சுமணன் செட்டியார் ,,
112 அ. ராம. அழ. ராமசாமி செட்டியார் ,,
113 ந. சொ. அரு. அருணாசலம் செட்டியார்
லெட்சுமிபுரம்
114 ராஜா சர். முத்தையா செட்டியார்
கானாடுகாத்தான்
115 க. வெ. சித. வெங்கடாசலம் செட்டியார் ,,
116 க. வெ. ராம. நாராயணன் செட்டியார் ,,
117 பழ. நாராயணன் செட்டியார்
நேமுத்தான்பட்டி
118 வயி. சண்முகம் செட்டியார் நாச்சியார்புரம்
119 சு. மு. சுப. சொக்கலிங்கம் செட்டியார் ,,

120 ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் கல்லல்
121 வெ. கண. வெ. வெள்ளையப்ப செட்டியார்
நாட்டரசன்கோட்டை
122 ஆவி. அரு. (கம்பர்) இராமநாதன்
செட்டியார் ,,
123 R. V. சுவாமிநாதன் பாகனேரி
124 உ. பாலசுப்பிரமணியன் ,,
125 வே. வே. நாகப்ப செட்டியார் ,,
126 வெ. பெரி. பழ. மு. காசிவிஸ்வநாதன்
செட்டியார் ,,
127 T. R. S. T. கண்ணப்பன் ,,
128 R. நடராஜய்யர் B. A. B. L. சிவகெங்கை
129 செ. சி. நா. லெ. நாராயணன்
செட்டியார் கண்டரமாணிக்கம்
130 கரு. முத்து. சிவலிங்கம் செட்டியார்
ஆ. தெக்கூர்
131 சி. ராம. இராமசாமி செட்டியார்
மகிபாலன்பட்டி
132 அ. பழ. பழநியப்ப செட்டியார் ஆவினிப்பட்டி
133 பெ. பெரி. சுப்பிரமணியன் செட்டியார் ,,
134 C. சோமசுந்தரம் செட்டியார் செவ்வூர்
135 ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் ராயவரம்
136 மு. அ. மு. முத்துராமன் செட்டியார் ,,
137 சு. சொ. இராமன் செட்டியார் ,,
138 பி. கு. நா. கும. நாகப்ப செட்டியார்
ராமச்சந்திரபுரம்
139 ராம. கும. சு. குமரப்ப செட்டியார் பலவான்குடி
140 பெ. மு. சுப. சுப்பிரமணியன் செட்டியார்
ஆத்தங்குடி
141 கு. ராம. ப. முத்தையா செட்டியார் ,,
142 கா. அரு. பழ. பழநியப்ப செட்டியார் ,,
143 கா. அரு. கா. காடப்ப செட்டியார் ,,
144 க. மு. அ. முத்தப்ப செட்டியார் கோனபட்டு
145 சு. மு. ராம. முரு. முருகப்ப செட்டியார் ,,
146 மெ. அ. ராம. சுப்பிரமணியன் செட்டியார் ,,
147 க. கு. கோதண்டராமன் கள்ளிப்பட்டி

148	கருமுத்து. தியாகராஜன் செட்டியார்	மதுரை
149	செ. சி. நா. லெ. அழகுசுந்தரம் செட்டியார்	,,
150	வ. ராம. வள்ளியப்ப செட்டியார்	,,
151	இ. அண்ணுமலே நாடார்	,,
152	N. M. R. சுப்புராமன்	,,
153	R. நாகராஜ்	,,
154	கு. அருணுசலக் கவுண்டர்	திருநெல்வேலி
155	அ. சீனிவாச ராகவன்	தூத்துக்குடி
156	சர்தார் அ. வேதரத்னம் M. L. A.	வேதாரண்யம்
157	டாக்டர் ராமச்சந்திரன்	புதுக்கோட்டை
158	நல்ல சேனுபதி சக்கரைமன்ருடியார்	பழையகோட்டை
159	கா. நயினுர் முகம்மது	உடுமலேப்பேட்டை
160	V. சேஷசாயி	திருச்சி
161	மு. அ. அருணுசலம் செட்டியார்	,,
162	கி. ஆ. பெ. விசுவநாதன்	,,
163	V. C. சுப்பையா கவுண்டர்	கோயம்புத்தூர்
164	அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார்	,,
165	N. கிருதாரி பிரசாத்	,,
166	T. அவிநாசிலிங்கம்	,,
167	P T S. சிங்காரம் செட்டியார்	கும்பகோணம்
168	K. S. வெங்குச் செட்டியார்	மாயூரம்
169	டாக்டர் அ சிதம்பரநாதச் செட்டியார்	கடலூர்
170	தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளே	அண்ணுமலே நகர்
171	V. வடிவேல் முதலியார்	காஞ்சீபுரம்
172	மு. சித. முத்தையா செட்டியார்	சென்னே
173	M. K. ஸ்ரீநிவாசன் B. A. B. L.	,,
174	N. V. நாயுடு	,,
175	நீலாவதி ராமசுப்பிரமணியம்	,,
176	T. புருஷோத்தம முதலியார்	,,
177	க. வெ. ராம. அழகப்ப செட்டியார்	,,
178	L. நடராஜ மூப்பனுர்	,,
179	சு. வீர. வீரப்ப செட்டியார்	,,

180	லெ. நடேசன்	,,
181	வ. செ. சிவலிங்கம் செட்டியார்	,,
182	மெ. மு. மெய்யப்ப செட்டியார்	,,
183	S. H. நாராயணன்	,,
184	S. கோபாலன்	,,
185	ம. பொ. சிவஞான கிராமணியார்	,,
186	ரா. பி. சேதுப்பிள்ளை	,,
187	கி. வா. ஜெகந்நாதன்	,,
188	பி. ஸ்ரீ. ஆச்சாரியார்	,,
189	அ. ச. ஞானசம்பந்தம்	,,
190	S. S. வாசன்	,,
191	T. சதாசிவம்	,,
192	A. N. சிவராமன்	,,
193	S. A. P. அண்ணாமலை	,,
194	வை. கோவிந்தன்	,,
195	K. பாஷியம்	,,
196	ப. ஜீவானந்தம்	,,
197	ரெங்கநாதன் செட்டியார்	கொச்சின்
198	செ ராம. வள்ளியப்ப செட்டியார்	கொழும்பு
199	இராம. பழநியப்ப செட்டியார்	,,
200	G. சாரங்கபாணி	சிங்கப்பூர்
201	M. K. சிதம்பரம்	,,

இணைப்பு-6

ராய. சொ. மணிவிழா செயற் குழு உறுப்பினர்கள்.

தலைவர் :—

அ. மு. க. மு. சித. முத்துக்கருப்பன் செட்டியார்

உப தலைவர்கள் ,—

அ. சொ. அண்ணுமலை செட்டியார்
கா. அரு. கா. காடப்ப செட்டியார்

காரியதரிசிகள் :—

சா. கணேசன்
அழ. அழகப்பன் (சத்தி)

உப காரியதரிசிகள் :—


பழ. நாச்சியப்பன் (அபிசீனியா)
ராம. தெ. தெவராயன்

பொக்கிஷதார் :—

நா. இராமநாதன்

உறுப்பினர்கள் :—

ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்
அழ. சுப. பழ. திருநாவுக்கரசு செட்டியார்
க, வெ. ராம. நாராயணன் செட்டியார்
மு. மரகதவல்லி அம்மாள்
மெ. நா. சித. சிதம்பரம் செட்டியார்
MR. S. மாணிக்கவேலு
அரு. அருணுசலம் (நகர்மன்றத் தலைவர்)
மு. மெ. முத்துராமன்
K. R. S. பழநியப்பன்
க. தேசிகன்
அ. ராம. ராம. இராமநாதன் செட்டியார்
அரு, மு. மு. அருணுசலம் செட்டியார்
ரெ. முத்துக்கணேசன்





பிறப்பு

விளம்பி - ஐப்பசி - கரு.

30 - 10 - 1898

இணைப்பு-7

ராய. சொ. வாழ்க்கைக் குறிப்புகள்

ராய. சொ. வின் பிறப்பும் கல்வியும் திருமணமும்

அறிஞர் ராய. சொக்கலிங்கனார் காரைக்குடியில் விளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15-ம் நாள் 30–10–1898 பிறந்தார். தந்தையார் திரு. ராய. சொ. ராயப்பசெட்டியார் தாயார் அழகம்மை ஆச்சி. சொக்கலிங்கனார் இளமையில் காரைக்குடியில் சுப்பையா ஆசிரியரிடம் திண்ணைப் பள்ளியில் பயின்றார். ராய. சொ. தந்தையாருக்குப் பாலக் காட்டில் ஒரு லேவாதேவிக் கடை இருந்தது. அதன் காரணமாக எட்டு. ஒன்பது வயது வரையில் பாலக்காட்டில் படித்தார். பதின்மூன்றாவது வயதில் பர்மாவுக்குச் சென்று பியாப்பம் என்ற ஊரில் மூன்றேகால் வருடம் இருந்து விட்டுத் தாய்நாடு திரும்பினார். காரைக்குடியில் தமது பதினெட்டாவது வயது முதல் இருபதாவது வயது வரையில் தமிழ் ஆசிரியர் பண்டித திரு சிதம்பர அய்யர் அவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியப் பாடங்களைக் கேட்டுப் பயின்றார். இக்காலம் சமூக சீர்திருத்தத் தந்தை சொ. முருகப்பாவின் தொடர்பு ஏற்பட்டது. காளயுக்தி ஆண்டு ஆனித் திங்கள் 8-ம் நாள் 21—6—1918 பள்ளத்தூரில் திரு. உமையாள் ஆச்சியை திருமணம் செய்துகொண்டார்.

சமூகத் தொண்டு

காரைக்குடியில் பிங்கள ஆண்டு ஆவணித் திங்கள் 26-ம் நாள் 10—9—1917 அன்பர் சொ. முருகப்பா பல அன்பர்களைச் சேர்த்துக்கொண்டு ஹிந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார். இச்சங்கம் கண்டதில் ராய. சொ. பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். அதன் பின் தனவணிக சமூகத்தில் வளர்ந்த குறைபாடுகளைச்

சீர்திருத்தம் செய்யக்கருதி, சித்தார்த்தி ஆண்டு ஆவணித் திங்கள் 26-ம் நாள் 11—9—1919ல் தனவைசிய ஊழியர் சங்கம் கண்டனர். இதிலும் ராய. சொ. பங்குகொண்டு பணியாற்றினர், இதன் சார்பில் ரௌத்திரி ஆண்டு ஆவணித் திங்கள் 24-ம் நாள் 8—9—1920 "தனவைசிய ஊழியன்" என்ற பெயரோடு ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் பெற்றது. இதன் ஆரம்ப கால ஆசிரியர் சொ. முருகப்பா இப் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு ஆரம்பத்தி லிருந்து ராய. சொ. அதன் ஆசிரியராக இருந்துவந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பத்திரிகையை "ஊழியன்" என்ற பெயருடன் மாற்றியமைத்துக் கொள்கையைப் பரந்த அளவில் விரிவுபடுத்திச் சுமார் இருபது ஆண்டுகள் ராய. சொ. நடத்தினா. இன்றையப் பத்திரிகை உலகில் முன்னணியில் உள்ளவர்கள் பலர் இவ் ஊழியனில் உதவி ஆசிரியர்களாக இருந்தவர்கள்.

அரசியல்

ராய. சொ. சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்து 9—1—1932 ஒரு வருடத் தண்டனை அடைந்தார். நாட்டுக் கோட்டை நகரத்தார் வகுப்பில் அரசியல் காரணமாக முதன் முதல் சிறை சென்றவர் அன்பர் ராய. சொ. தான். வ. வே. சு. அய்யர், கவியரசர் பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா முதலியவர்களுடன் நேரில் பழகியிருக்கிறார். ராய. சொ. மாசற்ற தேசபக்தர். தீவிர காங்கிரஸ் வாதி. மௌலானா முகமதலி தலைமை யில் நடைபெற்ற காக்கினடாக் காங்கிரசுக்கும், மகாத்மா தலைமை வகித்த பெல்காம் காங்கிரசுக்கும், ராஜேந்திரப் பிரசாத் தலைமை வகித்த பம்பாய்க் காங்கிரசுக்கும் ராய. சொ. பிரதிநிதியாகச் சென்றார். 1938 முதல் 1941 வரையில் காரைக்குடி நகரசபைத் தலைவராக இருந்தார். அகில இந்தியக் காங்கிரஸ்க் கமிட்டி அங்கத்தினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ்க் காரியக் கமிட்டி அங்கத்தினராக

வும், காரைக்குடி ஜில்லாக் காங்கிரஸ்க் கமிட்டித் தலைவ ராகவும் இருந்திருக்கிறார்.

வெளிநாட்டுப் பிரயாணம்

மனைவி உமையாள் ஆச்சியுடன் பர்மா, மலேயா, சிலோன், சயாம், சுமத்ரா, இந்தோசைனா முதலிய நாடு களில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார்.

சமய வாழ்க்கை

சைவ, வைணவ சமரச நோக்கங்கொண்ட அன்பர் ராய. சொக்கலிங்கனார், நாயன்மார்களின் பதிகங்கள் பெற்று விளங்கும் திருத்தலங்களுக்கும், ஆழ்வார்களின் பாசுரங்கள் பெற்று மிளிரும் திருப்பதிகளுக்கும் சென்று வணங்கும் கொள்கையை மேற்கொண்டிருக்கிறார். இச் சீரிய பணியில் பாடல் பெற்ற சிவத் தலங்கள் 274-ல் 266 திருத்தலங்களுக்கும், பாசுரங்கள் பெற்ற 108 திருப்பதி களில் 84 திருப்பதிகட்கும் இதுவரையில் போய் வந் திருக்கிறார்.

ராய. சொ. எழுதியதும் தொகுத்ததுமான நூல்கள்

1 பெண்விலைக் கண்டனச் செய்யுள்கள்.
2 காந்தி பிள்ளைத் தமிழ்.
3 காந்தியிருபா.
4 காந்தி பதினெண்பா.
5 காந்தி கலித்துறை அந்தாதி.
6 புதுமைப் பாக்கள்.
7 தாலாட்டும் கும்மியும்.
8 காந்தியும் வள்ளுவரும்,
9 காதற் கடிதங்கள்.
10 இன்பம் எது.
11 வள்ளுவர் தந்த இன்பம்.
12 காவேரி
13 குற்றாலவளம்
14 நாம் ஆர்க்கும் குடியல்லோம்.
15 காதற் பாட்டு.
16 தேனும் அமுதும்
17 சேதுபதி விறலிவிடு தூது.
18 கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது.
19 வருண குலாதித்தன் மடல்.
20 திருவாசகத்தேன்.
21 தேவார மணி.
22 ஆழ்வார் அமுது.
23 பாவைப் பாட்டு.
24 பிள்ளைப் பாட்டு.
25 திருமணப் பாட்டு.
26 தெய்வப் பாமாலை.
27 முருகன் மாமாலை.